பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

12 11 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அங்கோலாவில் தமது பயணத்தை முடித்துக் கொண்டு, போட்ஸ்வானா சென்றுள்ளார்.

2. பூடானுக்கு இந்தியா 4 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவியை வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

3. குறைந்த செலவில் தரமான மருத்துவ சிகிச்சை கிடைக்கச் செய்வதற்கு, அரசு, முன்னுரிமை அளித்து வருவதாக, மத்திய அமைச்சர் திரு.பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. தில்லியில் காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறு, சம்பந்தப்பட்ட மாநிலங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

5. ஜப்பான் அரசின் வர்த்தக தடை நடவடிக்கைகளுக்கு பதிலடியாக அந்நாட்டைச் சேர்ந்த 30 பேர் ரஷ்யாவுக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஆப்பிரிக்க நாடுகளில் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, அங்கோலாவில் தமது பயணத்தை முடித்துக் கொண்டு, அடுத்த கட்டமாக, போட்ஸ்வானா சென்றுள்ளார்.

அந்நாட்டு அதிபர் திரு. Duma Boko, Gaborone விமான நிலையத்தில் அவரை வரவேற்றார். 21 குண்டுகள் முழங்க, ராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

தமது இந்தப் பயணத்தின்போது, போட்ஸ்வானா அதிபருடன், பல்வேறு இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து குடியரசுத் தலைவர் இன்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஆப்பிரிக்க சிறுத்தைகளை, இந்தியாவிற்கு வழங்க போட்ஸ்வானா அரசு, ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள நிலையில், அதுகுறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும், போட்ஸ்வானா நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதுடன், அந்நாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவழியினருடனும் அவர் கலந்துரையாட உள்ளார்

முன்னதாக அங்கோலா தலைவர்களுடன், திருமதி.திரௌபதி முர்மு நடத்திய பேச்சுவார்த்தையின்போது, சர்வதேச பெரும் புலிகள் கூட்டணி மற்றும்

உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டணியில் உறுப்பினராக இணைய, அங்கோலா ஒப்புக் கொண்டது.

வருங்காலத்தில், இந்தியாவிலிருந்து அங்கோலாவிற்கு நேரடி விமான சேவைகளைத் தொடங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதுடன், மீன்வளம் மற்றும் அங்கோலாவில் உள்ள இந்திய தூதரக ஊழியர்களின் குடும்பத்தினர், அந்நாட்டில் வேலையில் சேர வகை செய்யும், இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இரு நாடுகளிடையே ஏற்பட்டுள்ளது.

<<<<>>>>

பூடானின் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியா சுமார் 4 ஆயிரம் கோடி ரூபாய் கடனுதவியை வழங்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக பூடான் சென்றுள்ள அவர், திம்புவில் நேற்று அந்நாட்டு மன்னர் திரு. Jigme Khesar Namgyel Wangchuck-ஐ சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது பேசிய பிரதமர், வாரணாசியில் பூடானிய வழிபாட்டுத்தலம் மற்றும் விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார்.

பிரதமரின் இந்த சந்திப்பின்போது இந்தியா-பூடான் இடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்பட்டது.

<<<<>>>>

குறைந்த செலவில் தரமான மருத்துவ சிகிச்சை கிடைக்கச் செய்வதற்கு, அரசு, அதிக முன்னுரிமை அளித்து வருவதாக, மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் சுகாதார மாநாடு ஒன்றில் பேசிய அவர், மருத்துவ சேவைகள் மற்றும் ஆயுள் காப்பீட்டிற்கான சரக்கு மற்றும் சேவை வரி ரத்து போன்ற, அரசின் நடவடிக்கைகளால், சுகாதாரத் துறை பெருமளவு பயனடைந்திருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில், திறமைவாய்ந்த, திறன் பயிற்சிபெற்ற இளம் தொழிலாளர்கள், குறிப்பாக, செவிலியர்கள் அதிகளவில் இருப்பதாக கூறிய அவர், இவர்களுக்கு, உலகளவில் நல்ல வரவேற்பு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் மருத்துவ சுற்றுலாத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஏதுவாக, குறைந்தபட்சம், மேலும் ஒரு லட்சம் பேருக்கு செவிலியர் பயிற்சி அளிக்க, ஒருங்கிணைந்து பணியாற்றுமாறும், மருத்துவமனைகளை அவர் கேட்டுக்கொண்டார்.

ஆயுர்வேதம் போன்ற நமது பாரம்பரிய மருத்துவ முறைகளை, நவீன மருத்துவத்துடன் இணைக்கும் போது தான், மத்திய அரசின் இந்தியாவில் குணமடைவீர் இயக்கம் வெற்றிபெறும் என்றும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

தில்லி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் காற்று மாசைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள உறுதியான நடவடிக்கை குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறு, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை, மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக, புதுதில்லியில் நடைபெற்ற உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய, மத்திய சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ், பயிர்க்கழிவு மேலாண்மை தொடர்பாக, மாவட்ட வாரியாக செயல்திட்டத்தை வகுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அத்துடன், பயிர்க் கழிவுகளை எரிப்பதை, ஆண்டு முழுவதும் கண்காணிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

பயிர்க் கழிவு மேலாண்மை இயந்திரங்களை இயக்குவது குறித்து, விவசாயிகளுக்கு உரிய பயிற்சி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும், அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

நகராட்சி திடக்கழிவுகளை, பொதுவெளியில் எரிப்பதை, அனுமதிக்கக் கூடாது என்றும் திரு.பூபேந்தர் யாதவ், தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிஹார் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற இரண்டாம் கட்டத் தேர்தலில் 69 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகள் பதிவாகியுள்ளது.

அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர திருத்தத்திற்குப் பிந்தைய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றவர்களில் 7 கோடியே 50 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை செலுத்தியிருப்பது இதுவரை

இல்லாத சாதனை என்று தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணியாளர்கள் மேற்கொண்ட வெளிப்படையான நடவடிக்கை காரணமாக அம்மாநிலத்தில் தங்களது பெயர் விடுபட்டுவிட்டதாக எந்த வாக்காளரும் முறையீடு செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

**<<<<>>>>**

கோவாவில் நடைபெற உள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள், இந்தாண்டும், கொங்கனி உள்ளிட்ட 18 மொழிகளில் வெளியிடப்படும் என்று, பத்திரிகை தகவல் அலுவலக முதன்மைத் தலைமை இயக்குனர் திரு.தீரேந்திர ஓஜா தெரிவித்துள்ளார்.

கோவாவில் செய்தியாளர்களுடன் கலந்துரையாடிய அவர், இந்த திரைப்பட விழாவிற்கு, கடந்த ஆண்டு, 700 செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு, 50-க்கும் அதிகமான செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

ஊடகவியலாளர்களுக்கான வசதிகளை மேம்படுத்த, இந்தாண்டு கூடுதல் வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விருந்தினர்களுடன், பிரத்யேக பேட்டி எடுப்பதற்காக, "IFFIWood" படப்பிடிப்பு அரங்கம் அமைக்கப்பட்டிருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி, வரும் 18-ந் தேதி தொடங்கும் என்றும் திரு. தீரேந்திர ஓஜா தெரிவித்தார்.

**<<<<>>>>**

சர்தார் வல்லப்பாய் பட்டேலின் 150வது பிறந்த நாளையொட்டி இளைஞர்களிடையே தேச ஒற்றுமை உணர்வை மேம்படுத்தும் விதமாக தமிழகத்தின் சேலத்தில் தேசிய ஒற்றுமை தின பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் ஒற்றுமை உறுதிமொழி மற்றும் சுதேசி பொருட்களை அதிக அளவில் பயன்படுத்தவும் உறுதியேற்றனர்.

(Voice Byte - Students - 25 Sec)

**<<<<>>>>**

ஜப்பான் அரசின் வர்த்தக தடை நடவடிக்கைகளுக்கு பதிலடியாக அந்நாட்டைச் சேர்ந்த 30 பேர் ரஷ்யாவுக்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜப்பான் அரசின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் பத்திரிகையாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாக ரஷ்ய வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது.

<<<<>>>>

குழந்தைகளின் ஆதார் பயோமெட்ரிக் பதிவுகளை புதுப்பிப்பதற்காக, தனியார் ஆராய்ச்சி நிறுவனத்துடன், தனித்துவ அடையாள அட்டை ஆணையம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சிறுவர்களுக்கான பயோமெட்ரிக் பதிவுகளை, குறிப்பிட்ட காலத்திற்குள் புதுப்பிப்பதை அதிகரிக்கச் செய்வதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆதார் அடிப்படையிலான சேவைகள் மற்றும் பலன்கள் தடையின்றி கிடைக்க வழிவகை ஏற்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆதார் பதிவு செய்துகொண்ட குழந்தைகள், முறையே, 5 வயது மற்றும் 15 வயதை எட்டும்போது, அவர்களது விரல் ரேகை, கண்புருவம் மற்றும் புகைப்படம்

உள்ளிட்ட பயோமெட்ரிக் பதிவுகளை, புதுப்பிப்பது அவசியம் என்றும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

மேலும், இந்த வயதுடையவர்கள், ஆதார் பதிவுகளை புதுப்பிப்பதற்கான கட்டணம் ரத்து சலுகை, மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டிருப்பதாகவும் தனித்துவ அடையாள அட்டை ஆணையத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. புவனேஷ் குமார் தெரிவிதுதுள்ளார்.

<<<<>>>>

தேசிய மனித உரிமைகள் ஆணையம், இரண்டு குறுகிய கால, ஆன்லைன் இன்டர்ன்ஷிப் பயிற்சிகளைத் தொடங்கியுள்ளது.

இதற்காக வரப்பெற்ற 906 விண்ணப்பங்களில், 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த, பல்வேறு படிப்புகளைப் பயிலும் 80 மாணவர்கள், இப்பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களில் பயிலும் மாணவர்கள், மனித உரிமை பாதுகாப்பு குறித்து, விரிவாக தெரிந்துகொள்ளும் வகையில், இந்தப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக, அந்த ஆணையத்தின் தலைமைச் செயலாளர் திரு. பரத் லால் தெரிவித்துள்ளார்.

(C/o)

ஆன்லைன் முறையில் பயிற்சி அளிப்பதன் மூலம், குக்கிராமங்கள் மற்றும் தொலைதூரங்களில் வசிப்பவர்களும், மனித உரிமைகள் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (C/o)

<<<<>>>>

உலகக்கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா, அர்ஜுன் எரிகைசி, ஹரிகிருஷ்ணா மற்றும் கார்த்திக் வெங்கட்ராமன் ஆகியோர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கோவாவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில் பிரக்ஞானந்தா - ரஷ்யாவின் Daniil Dubov-ஐ வென்றார்.

எஞ்சிய மூவரும் தங்களது ஆட்டங்களை டிரா செய்தனர்.

<<<<The End>>>>